**ஜூலை – 29**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மாமல்லபுரத்தில் 31-வது தென் மண்டல சபைக் கூட்டத்தை தமிழ்நாடு நடத்தவுள்ளது.
    - தென் மண்டல சபை என்பது 1956 ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப் பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும் என்பதோடு இதில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஒன்றியப் பிரதேசமான புதுச்சேரி ஆகியவை அடங்கும்.
- பீகாரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பளுதூக்குதல் வீரர் ஜந்து குமார், கிளாஸ்கோவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் (CWG), ஆண்களுக்கான ஹெவிவெயிட் பாரா பவர்லிஃப்டிங் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று இந்தியாவுக்கான முதல் பதக்கத்தைப் பெற்றுத் தந்தார்.
- ஐக்கிய நாடுகளின் சர்வதேச வர்த்தக சட்ட ஆணையத்தின் (UNCITRAL) 60-வது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் சர்வதேச மாநாட்டை இந்தியா நடத்தியது.
    - இம்மாநாட்டில் டிஜிட்டல் வர்த்தகம், தொழில்நுட்ப மாற்றங்கள், விநியோகச் சங்கிலிச் சீர்குலைவுகள் மற்றும் மாறிவரும் உலகளாவிய வர்த்தக முறைகள் ஆகியவற்றின் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- புது தில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு உலக ஜூனியர் ஸ்குவாஷ் தனிநபர் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை இந்திய ஸ்குவாஷ் வீராங்கனை அனாஹத் சிங் பெற்றார்.
- இந்தியாவின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பார்கவாஸ்த்ரா கூட்டு/இணை ஆளில்லா வான்வழி வாகன எதிர்ப்பு அமைப்பு மகாராஷ்டிராவின் நாக்பூரில் காட்சிப் படுத்தப் பட்டது.
- இளம் பருவத்தினருக்கு (15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்) நாடு தழுவிய சமூக ஊடகத் தடையை விதித்த ஐரோப்பாவின் முதல் நாடு பிரான்ஸ் ஆகும்.
    - கடந்த டிசம்பரில், டிக்டாக், யூடியூப், ஸ்னாப்சாட் மற்றும் பிற முன்னணி தளங்களில் 16 வயதுக்குட்பட்டவர்களின் கணக்குகளை நீக்குமாறு அல்லது கடுமையான அபராதங்களை எதிர்கொள்ளுமாறு கட்டாயப்படுத்திய உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா ஆனது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஏழாவது மாநில நிதிக்குழுவின் பதவிக்காலம் நீட்டிப்பு


- தமிழ்நாடு அரசு ஏழாவது மாநில நிதிக்குழுவின் பதவிக்காலத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 முதல் 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை நான்கு மாதங்களுக்கு நீட்டித்து உள்ளது.
- இந்த ஆணையம் 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் கே. அல்லாவுதீன் (ஓய்வுபெற்ற IAS அதிகாரி) தலைமையில் அமைக்கப்பட்டது.
- இது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் நிதி நிலைமையை மதிப்பாய்வு செய்கிறது.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு நிதியை பகிர்ந்தளிப்பது குறித்து இந்த

ஆணையம் பரிந்துரைக்கிறது.

- இது 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் தொடங்கும் ஐந்து ஆண்டுகளை உள்ளடக்கிய தனது அறிக்கையை 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கும்.




## தமிழ்நாடு வருவாய் பெருக்குக் குழு




- மாநிலத்தின் வருவாய் ஆதாரத்தை வலுப்படுத்துவதற்காக வேண்டி மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையில் தமிழ்நாடு வருவாய் பெருக்குக் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.
- வரி மற்றும் வரியற்ற வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வரி இணக்கத்தை மேம்படுத்துதல், வரிக் கசிவுகளை அடைத்தல், வரி விகிதங்கள் மற்றும் கட்டணங்களை முறைப்படுத்துதல் மற்றும் புதிய வருவாய் ஆதாரங்களை கண்டறிதல் ஆகியவற்றை இக்குழு பரிந்துரைக்கும்.
- பொதுத்துறை நிறுவனங்களின் (PSU) ஈவுத்தொகை, நிலம் மற்றும் சொத்துக்களை பணமாக்குதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட பயனர் கட்டணங்கள் போன்ற வரியற்ற வருவாய்களையும் இது ஆராயும்.
- வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்துதல், தொழில்நுட்பத்தின் மூலம் வருவாய் நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் மதுபான வரியின் மூலம் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை இக்குழு பரிந்துரைக்கும்.

- தமிழ்நாட்டின் நிதித் தன்னிறைவை வலுப்படுத்தவும், அதன் மேம்பாட்டு கடமைகளுக்கு ஆதரவளிக்கவும் இக்குழு மூன்று மாதங்களுக்கு செயல்படும்.

# தேசியச் செய்திகள்

## தேர்வு சீர்திருத்தங்களுக்கான பணிக்குழு

- தேர்வு முறையில் சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க உயர்மட்டப் பணிக்குழு அமைக்கப்படும் என இந்தியப் பிரதமர் அறிவித்தார்.
- தேர்வுகளில் வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டை மேம்படுத்த தொழில்நுட்ப வல்லுநர் நந்தன் நிலேகனி தலைமையில் இப்பணிக்குழு செயல்படும்.
- உளவுத்துறையின் (IB) முன்னாள் இயக்குநர் தபன் தேகா, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) முன்னாள் தலைவர் எஸ். சோம்நாத் மற்றும் மெட்ராஸ் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (IIT) இயக்குநர் வி. காமகோடி ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர்.
- முன்னாள் கல்வித்துறைச் செயலாளர் அனிதா கர்வால் மற்றும் தளவாட நிபுணர் அமிர்த லால் மீனா ஆகியோர் இதன் பிற உறுப்பினர்களாவர்.
- தேர்வு முறைகேடுகளைத் தடுக்கவும், மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் கடுமையான வழிமுறைகளுடன் நாடாளுமன்றத்தில் புதிய சட்டத்தை அரசு அறிமுகப் படுத்த உள்ளது.

**EXAM REFORMS TASK FORCE FORMED**


PM Narendra Modi announced a high-powered task force on examination reforms led by technology expert Nandan Nilekani. The panel will recommend measures to make exams more transparent, secure, and technology-driven, with the government promising swift action to restore trust in the examination system.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்கு 2030

- 2030-ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்கை அடையும் பாதையில் இந்தியா உள்ளது.
- 2030-ஆம் ஆண்டு காலக்கெடுவிற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே, புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து 50% நிறுவப்பட்ட மின்சாரத் திறனை அடையும் தனது இலக்கை இந்தியா ஏற்கனவே அடைந்துள்ளது.
- நாடு 297.36 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின்சாரத் திறனையும், 288.58 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனையும் நிறுவியுள்ளது.
- சூரிய ஆற்றல் 162.15 ஜிகாவாட் உடன் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து காற்றாலை ஆற்றல் 57.44 ஜிகாவாட், பெருமளவில் நீர்மின்சாரம் 52.06 ஜிகாவாட், உயிரி ஆற்றல் 11.75 ஜிகாவாட் மற்றும் சிறு அளவிலான நீர்மின்சாரம்

5.18 ஜிகாவாட் என அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

- 2030-ஆம் ஆண்டுக்குள் புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து 500 ஜிகாவாட் நிறுவப்பட்ட மின்சாரத் திறனை அடையும் தனது இலக்கையும் இந்தியா சிறப்பாக அடைந்து வருகிறது.
- மொத்தமாக நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்தியா உலகளவில் 3வது இடத்தில் உள்ளது (சீனா, அமெரிக்காவிற்குப் பிறகு).
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலை விரிவுபடுத்துவதில் உள்ள முக்கிய சவால்களில் நிலம் கையகப்படுத்துதல், மின் பரிமாற்ற உள்கட்டமைப்பு மற்றும் மின்கட்டமைப்பு ஒருங்கிணைப்பு ஆகியவை அடங்கும்.





## ரயில்வே மின்மயமாக்கலில் உலகத் தலைமை

- 99.6% அகல ரயில் பாதை வலையமைப்பை மின்மயமாக்கியதன் மூலம், ரயில்வே மின்மயமாக்கலில் இந்தியா உலகத் தலைவராக உருவெடுத்துள்ளது.
- சுவிட்சர்லாந்திற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.
- சீனா (82 சதவீதம்), ஸ்பெயின் (67 சதவீதம்), ஜப்பான் (64 சதவீதம்), பிரான்ஸ் (60 சதவீதம்) மற்றும் ஐக்கியப் பேரரசு (39 சதவீதம்) உள்ளிட்ட பல முக்கிய ரயில்வே வலையமைப்புகளை விட இது முன்னணியில் உள்ளது.
- ரயில் போக்குவரத்து ஒரு டன்-கிலோமீட்டருக்கு சுமார் 11.5 கிராம் கார்பன் டை ஆக்சைடை வெளியிடுகிறது என்ற நிலையில் இது, சுமார் 101 கிராம் வெளியிடும் சாலைப் போக்குவரத்தை விட கிட்டத்தட்ட 89 சதவீதம் குறைவாகும்.
- மின்மயமாக்கல், இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருக்கும் இந்திய ரயில்வேயின் நிலையையும் குறைத்துள்ளது.
- சுற்றுச்சூழல் நன்மைகளைத் தவிர, மின்சார இழுவை முறையானது அதிக இழுவைத் திறன், வேகமான ரயில் வேகம் மற்றும் குறைந்த பயண நேரம் ஆகியவற்றைச் சாத்தியமாக்குவதன் மூலம் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தியுள்ளது.
- ரயில்வே மண்டலங்களைப் பொறுத்தவரை, மத்திய, வடக்கு, கிழக்கு, மேற்கு, தென் மத்திய மற்றும் கிழக்கு கடற்கரை ரயில்வேக்கள், கொங்கன் ரயில்வே மற்றும்

கொல்கத்தா மெட்ரோ உள்ளிட்ட 15 மண்டலங்கள் ஏற்கனவே 100 சதவீத அளவிலான மின் மயமாக்கலை அடைந்துள்ளன.

- மாநில அளவில், ஆந்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா, ஒடிசா, தெலங்கானா, பஞ்சாப் மற்றும் டெல்லி உள்ளிட்ட பல மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் முழுமையான ரயில்வே மின்மயமாக்கலை அடைந்துள்ளன.





## சுற்றுச்சூழல் செய்திகள்


### சமூக வனப் பாதுகாப்பு - பந்தேல்கண்ட் காடுகள்

- சட்டப்பூர்வ பாதுகாப்பு இல்லாவிட்டாலும், பந்தேல்கண்ட் (உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம்) பகுதியில் உள்ள புனிதத் தோப்புகள் (தேவஸ்தானங்கள்) அருகிலுள்ள சீரழிந்த காடுகளை விட அதிக பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பதாக 2026 ஆம் ஆண்டு ஆய்வு கண்டறிந்துள்ளது.
- அருகிலுள்ள சிதைவடைந்த காடுகளில் 40–51 தாவர இனங்கள் மட்டுமே காணப்பட்ட நிலையில், பல மருத்துவ தாவரங்கள் உட்பட 70–72 தாவர இனங்கள் புனிதத் தோப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த சமூகம் சார்ந்த பாதுகாக்கப்பட்ட காடுகள் பாரம்பரிய நம்பிக்கைகள் மூலம் பாதுகாக்கப் படுகின்றன. பல்லுயிரியலைப் பாதுகாப்பதில் பழங்குடியினர் மற்றும் தலித் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
- நில ஆக்கிரமிப்பு, சுரங்கத் தொழில், மாறிவரும் மத நடைமுறைகள் மற்றும் சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லாமை ஆகியவை இதன் முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், உச்ச நீதிமன்றம் புனிதத் தோப்புகள் குறித்து

நாடு தழுவிய அளவீடு நடத்த உத்தரவிட்டதுடன், 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் கீழ் உள்ளூர் சமூகங்களை அதன் பாதுகாவலர்களாக அங்கீகரிக்க பரிந்துரைத்தது.




## வடகிழக்கு இந்தியாவில் ஒருங்கிணைந்த வேளாண்மை




- ❖ அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேச விவசாயிகள் அபாயங்களைக் குறைக்கவும், பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும், பருவநிலையைத் தாங்கும் விவசாய நிலங்களை உருவாக்கவும் ஒருங்கிணைந்த வேளாண்மை முறைகளை (IFS) பின்பற்றி வருகின்றனர்.
- ❖ IFS என்பது பயிர்கள், கால்நடைகள், மீன்குட்டைகள், கோழிகள், பன்றிகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது, இதில் ஒரு பிரிவிலிருந்து கிடைக்கும் கழிவு மற்றொரு பிரிவிற்கு இடுபொருளாக மாறுகிறது.
- ❖ இந்த அணுகுமுறை ரசாயன உரங்கள் மற்றும் வெளிப்புற இடுபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது, அதே நேரத்தில் மண் வளம் மற்றும் வேளாண் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது.
- ❖ தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (NABARD) ஆதரவுடன் செயல்படும் கிராம முன்னேற்றத்திற்கான கூட்டு முன்னெடுப்புத் (JIVA) திட்டம், இப்பகுதியில் ஒருங்கிணைந்த வேளாண்மையை ஊக்குவிக்கிறது.

- ஒருங்கிணைந்த வேளாண்மை சிறு விவசாயிகளுக்கு வருமான ஆதாரங்களைப் பன்முகப்படுத்தவும், வளங்களைப் பாதுகாக்கவும், பருவநிலை தொடர்பான சவால்களில் இருந்து சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஐ.நா. SOFI அறிக்கை 2026




- 2025-ஆம் ஆண்டில் உலகளாவிய பட்டினி குறைந்துள்ளது, ஆனால் பட்டினியின்மை இலக்கை அடைவதில் உலகம் பின்தங்கியுள்ளது.
- 2030-ஆம் ஆண்டுக்கான பட்டினியின்மை இலக்கை அடைவதில் உலகம் பின்தங்கி உள்ளது.
- 2025-ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் 7.8 சதவீதம் பேர் பட்டினியை எதிர்கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- மோதல்கள், தீவிர வானிலை, உதவிக் குறைப்பு மற்றும் சத்தான உணவுகளின் விலை உயர்வு ஆகியவை சமீபத்திய முன்னேற்றங்களைத் தலைகீழாக மாற்றக்கூடும்.
- இத்தகையத் தரவுகள் கண்காணிக்கப்பட்டதிலிருந்து முதல் முறையாக, அதிக எண்ணிக்கையிலான பசியால் வாடும் மக்களைக் கொண்ட பிராந்தியமாக ஆப்பிரிக்கா, ஆசியாவை முந்தியுள்ளது.
- தெற்கு சூடான், புருண்டி, சோமாலியா, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு மற்றும் சாட் ஆகிய நாடுகளில் மிகக் கடுமையான பட்டினி நெருக்கடிகள் ஏற்படுகின்றன.
- ஆப்பிரிக்காவில் உணவுப் பொருட்களை வாங்க முடியாத நிலைக்கு முக்கியக் காரணம், பால், முட்டை மற்றும் இறைச்சி உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்த விலங்குசார் உணவுகளுடன் தொடர்புடையதாக இருந்தது.

- 'உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை 2026' என்ற அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து சிறப்பு நிறுவனங்களான உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதியம் (IFAD), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF), உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றால் கூட்டாக வெளியிடப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## CWG 2026

- 23வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் (CWG 2026) ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்று வருகின்றன.
- இது காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டு வீரர்களால் போட்டியிடும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச பல-விளையாட்டு நிகழ்வாகும்.
- 1970 மற்றும் 1986 ஆம் ஆண்டு எடின்பரோவில் நடந்த விளையாட்டுகள் மற்றும் 2014 ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடந்த விளையாட்டுகளைத் தொடர்ந்து ஸ்காட்லாந்தில் நடத்தப்படும் நான்காவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி இதுவாகும்.
- இந்தியா 126 பேர் கொண்ட குழுவை அனுப்பியது, இது முந்தைய பதிப்புகளை விட மிகவும் சிறியது.
- 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் விளையாட்டுப் போட்டியில் இந்தியா 61 பதக்கங்களுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது.
- பூப்பந்து, கிரிக்கெட், ஹாக்கி, ஸ்குவாஷ், டேபிள் டென்னிஸ் மற்றும் மல்யுத்தம் ஆகியன இம்முறை விலக்கப்பட்டுள்ளன.
- காமன்வெல்த் நேஷன்ஸ் என்பது 56 நாடுகளின் குழுவாகும் என்பதோடு இது பெரும்பாலும் முன்னாள் பிரிட்டிஷ் காலனிகளைக் கொண்டது.
- இது 1949 ஆம் ஆண்டில் லண்டன் பிரகடனத்தால் நிறுவப் பட்டது.




# முக்கிய தினங்கள்

## உலக இயற்கை பாதுகாப்பு தினம் 2026 - ஜூலை 28


- நிலையான எதிர்காலத்திற்காக வேண்டி பல்லுயிர் தன்மை, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை

ஏற்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- காடுகள், வனவிலங்குகள், நீர், மண் மற்றும் பிற இயற்கை வளங்களை நிலையான நடைமுறைகள் மூலம் பாதுகாப்பதை இந்த தினம் ஊக்குவிக்கிறது.
- பல்லுயிர் தன்மையைப் பாதுகாப்பதற்கும், அழியும் தருவாயில் உள்ள உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கும் உலகளாவிய முயற்சிகளை இது ஆதரிக்கிறது.
- இந்த அனுசரிப்பு 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர் தன்மை இழப்பைத் தடுத்து நிறுத்தி அதனை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட குன்மிங்-மான்ட்ரியல் உலகளாவிய பல்லுயிரியல் கட்டமைப்புடன் (GBF) ஒத்துப்போகிறது.
- சுத்தமான காற்று, சுத்தமான நீர், உணவுப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை நிலைத் தன்மையை உறுதி செய்வதில் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது.




## உலக செயற்கைக் கருத்தரித்தல் தினம் 2026 - ஜூலை 25




- 1978-ஆம் ஆண்டில் பிறந்த உலகின் முதல் செயற்கை கருத்தரிப்பின் (IVF) மூலம் பிறந்த குழந்தையான லூயிஸ் பிரவுனின் பிறப்பை நினைவு கூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- செயற்கை கருத்தரிப்பு (IVF) என்பது ஒரு துணை இனப்பெருக்க தொழில்நுட்பம் (ART) ஆகும் இதில், கருவானது கருப்பைக்கு மாற்றப்படுவதற்கு முன்பு, ஆய்வகத்தில் ஒரு முட்டையுடன் விந்தணு கருவுறச் செய்யப்படுகிறது.
- மலட்டுத்தன்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், களங்கத்தைக் குறைத்தல், இனப்பெருக்க ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் மற்றும் கருவுறுதல் சிகிச்சைக்கான

அணுகலை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ அடைபட்ட கருக்குழாய்கள், ஆண்களின் மலட்டுத்தன்மை, அண்டவிடுப்பின் கோளாறுகள், எண்டோமெட்ரியோசிஸ், விவரிக்க முடியாத மலட்டுத்தன்மை அல்லது வயது தொடர்பான மலட்டுத்தன்மை உள்ளவர்களுக்கு IVF உதவக்கூடும்.

❖ நவீன IVF நடைமுறைகள் பல கருவுறுதல்களைக் குறைப்பதற்காக பெரும்பாலும் ஒற்றை கரு மாற்று முறையைப் பயன்படுத்துகின்றன, மேலும் பெரும்பாலான IVF குழந்தைகள் ஆரோக்கியமாகவும் இயல்பாகவும் வளர்கின்றன.

## நீதித்துறை நல்வாழ்விற்கான சர்வதேச தினம் 2026 - ஜூலை 25


❖ நீதிபதிகள் மற்றும் பிற நீதித்துறை அதிகாரிகளின் நல்வாழ்வு, சுதந்திரம், நேர்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ நீதித்துறை நல்வாழ்வு குறித்த நவ்ரு பிரகடனத்தின் (2024) அடிப்படையில், 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் (UNGA) ஒரு தீர்மானத்தின் மூலம் இந்த தினம் அறிவிக்கப்பட்டது.

❖ நியாயமான நீதி, பொது நம்பிக்கை, நீதிக்கான அணுகல் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு நீதித்துறையின் நல்வாழ்வு அவசியம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

❖ நவ்ரு பிரகடனம் மனநலக் களங்கத்தை அகற்றுதல், ஆதரவான நீதித்துறை நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் முழுமையான நல்வாழ்வு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்ட ஏழு வழிகாட்டும் கொள்கைகளை கோடிட்டுக் காட்டுகிறது.

❖ 2021 ஆம் ஆண்டு உலகளாவிய நீதித்துறை ஒருமைப்பாட்டு வலையமைப்பு கணக்கெடுப்பின் படி, 92% நீதிபதிகள் பணி தொடர்பான மன அழுத்தத்தைப் பதிவு செய்துள்ளனர், மேலும் 97% பேர் நீதித்துறை நல்வாழ்வில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர்.





# இதரச் செய்திகள்

## சாரநாத்தின் பண்டைய புத்த தளம் - யுனெஸ்கோ அந்தஸ்து

❖ தென் கொரியாவின் பூசானில் நடைபெற்ற உலகப் பாரம்பரியக் குழுவின் 48-வது அமர்வில் (2026), உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாரநாத்தின் பண்டைய புத்த தளம் யுனெஸ்கோவின் (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு)

உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

- உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி மாவட்டத்தில் அமைந்துள்ள சாரநாத், புத்தர் ஞானம் பெற்ற பிறகு தனது முதல் போதனையை (தர்மசக்கர பிரவர்த்தனா) நிகழ்த்திய இடமாகும்.
- இந்தச் சேர்க்கையின் மூலம், இந்தியா தற்போது 45 யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்டுள்ளது.
- புத்த கயாவில் (பீகார்) உள்ள மகாபோதி கோயில் வளாகம் மற்றும் சாஞ்சியில் (மத்தியப் பிரதேசம்) உள்ள புத்த நினைவுச் சின்னங்கள் போன்ற இந்தியாவின் பிற பௌத்த பாரம்பரியத் தளங்களுடன் சாரநாத் இணைகிறது.
- யுனெஸ்கோ அங்கீகாரத்திற்கு, ஒரு தளம் சிறந்த உலகளாவிய மதிப்பை (OUV) கொண்டிருக்க வேண்டும் மற்றும் 10 தேர்வு அளவுகோல்களில் குறைந்தது ஒன்றையாவது பூர்த்தி செய்ய வேண்டும்.




## ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2026

- சமீபத்திய 2026 ஆம் ஆண்டிற்கான ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியாவின் கடவுச்சீட்டு தரவரிசை, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்த 75-வது இடத்திலிருந்து 81-வது இடத்திற்கு சரிந்துள்ளது.
- இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் விசா இல்லாமலோ அல்லது வருகையின் போது விசா (visa-on-arrival) பெறும் வசதியுடனோ 55 இடங்களுக்குச் செல்ல முடியும்.
- சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் (IATA) தரவுகளைப் பயன்படுத்தி 227 பயண இடங்களுக்கான 199 கடவுச்சீட்டுகளை ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு தரவரிசைப் படுத்துகிறது.
- 192 இடங்களுக்கு விசா இல்லாத அணுகலை வழங்கி சிங்கப்பூர் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- ஜப்பான், தென் கொரியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை 188 இடங்களுக்கான அணுகலுடன் கூட்டாக இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- முன் அனுமதி விசா பெறாமல் அணுகக்கூடிய இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உலகளாவிய பயணச் சுதந்திரத்தை இந்தக் குறியீடு அளவிடுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★